# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,931 — 1970 නොවැම්බර් 5 වැනි බ්‍රහස්පතින්ද — 1970.11.5

14,931 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 5 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 335 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 336 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | 339 |
| துணை விதிகள் .. .. .. | 340 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | 342 |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. | 342 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### பட்டினங்களினதும் கிராமங்களினதும் பெயர்கள் மாற்றம்

முதலாம் நிரலில் உள்ள கிராமத்தின் பெயர் இரண்டாம் நிரலில் உள்ள பெயரால் பதிலீடு செய்யப்படுகின்றது என்பதைப் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எவ். ஆர். டீ. பண்டாரநாயக்க,
பொது நிருவாக, உள்ளூராட்சி,உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சர்.

பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 30 ந் ஸ்ரீ.

| மாவட்டம் | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| கொழும்பு .. | கவகமுவ .. | நவகமுவ |

11-259—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசத்தாருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல்.டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் ஸ்ரீ.

# பதவிகள் — வெற்றிடம்

## ''இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை'' யின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

**படிகள்.**—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

2. *சேவை நிபந்தனைகள்.*—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவை அதிகாரச் சட்டத்திற்கும். உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் ஏதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

3. *நியமன விதிகள்.*—(அ) 1952 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ந் திகதி வெளியான 10,432 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறித்துச் சொல்லப்பட்ட பதவிகளும், அவற்றோடு காலத்திற்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டத்திற்கு மாற்றப்படாத பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது, 1962 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை இளைப்பாற்றுச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரியனவாகும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின்படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும் போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ், உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தார்களோ அந்த உள்ளூராட்சி தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவை இளைபாற்றுச் சம்பளத்திட்டத்தின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குட்படாததாக அறிவிக்கப்பட்ட பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் அப்பதவிகளுக்கு நியமனஞ் செய்யப்படுபவர்கள், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின், 18 ம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை சகாய நிதிக்கு, தமது சம்பளத்தின் 5 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். அவர்கள் நியமிக்கப்படும் உள்ளூராட்சித் தாபனங்கள், அவர்கள் சார்பாக, அவர்களின் சம்பளத்தின் 7½ சத விகிதத்தை அந்நிதிக்குச் செலுத்தும்.

(உ) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளில் இருந்தவர்களும் தவிர 1952 ம் ஆண்டு ஜூலை மாதம் 30 ந் திகதி வெளியான 10,329 ம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி ஸ்தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கு கருதப்படும் தங்களது அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சித் தாபனம் கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஊ) நியமிக்கப்படுபவர்கள். குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(எ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப் படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேகதகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின், வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(ஏ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

(ஐ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச்சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஒ) நியமிக்கப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.

4. *உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.*—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றி, சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின்" தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துவதற்கு ஏதுவாக, 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும், அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில், அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட காலவரையறைக்குள், க. பா. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் நிறுத்தப்படலாம்.

(5) **கல்வியும் ஏனைய தகைமைகளும்.**—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்களப் பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

குறிப்பு.—(1) சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமைபெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப்பெறுவர்.

குறிப்பு.—(2) இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு.—(3) 4 (3) ஆம், 4 ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. **போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.**—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில், தமது வயதுகளிலிருந்து, கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித்தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படைவீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. **வயதுச்சலுகை.**— இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தர பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. **வேண்டற்பால ஏனையவை.**—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுறுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள், அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா ? இல்லையா ? என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாக வேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும் ; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவார்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகலவகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) " கீழே இணைக்கப்பட்ட படிவத்தில் " விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீர்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

**வேறு விதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்**

உள்ளூராட்சிச் சேவை

**முக்கியமாகக் கவனிக்க.**—(1) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யு முன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவறுது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ். (2) குணச் சான்றிதழ். (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பக்காரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாக கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

**............................(......) பதவிக்கான விண்ணப்பம்.**

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :————.
   (ஆ) ......................பதவிக்கான விண்ணப்பம்.

2. முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.
   தேசிய இனம் :————.
   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா ? இலங்கையரல்லாதவரா ? என்பதைக் கூறுக. நீர் பதிவுமூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக).

(3) தபால் விலாசம் :————.
   (விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :————.
   ————வருடங்கள்————மாதங்கள்————நாட்கள்.
   (ஆ) பிறந்த திகதி :————வருடம் ————மாதம் ————திகதி

5. பிறந்த இடம்—
   (அ) விண்ணப்பக்காரர் :————.
   (ஆ) அவரது பிதா :————.
   (இ) அவரது பிதாவழிப் பேரன் :————.
   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :————.
   (விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா ? தனியாளரா ? தாரமிழந்தவரா ? அல்லது கைம்பெண்ணா ? :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழிற்/தொழில் நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1 ...................... | ...... | ...... | 1 ........ | ...... | ...... |
| 2 ...................... | ...... | ...... | 2 ........ | ...... | ...... |
| 3 ...................... | ...... | ...... | 3 ........ | ...... | ...... |
| 4 ...................... | ...... | ...... | 4 ........ | ...... | ..... |
| 5 ...................... | ...... | ...... | 5 ........ | ...... | .... |

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் :————.
   (அ) சிங்களம் :————.
   (ஆ) ஆங்கிலம் :————.
   (இ) தமிழ் :————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில்நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. உயர்தொழில்/தொழில்நுட்ப/தொழில் அனுபவங்கள் :————.

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி/ வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்).

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக.) :————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :————.

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :————.

(3) இளைப்பாற்றிச் சம்பளமுண்டா ? :————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா :————.

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அநுபவம் இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில் அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக.) :————.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத்தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? :————.

16. வேறு ஏதும் விவரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும்). அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை :————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :————.

செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
தபால் பெட்டி 530,
கொழும்பு 1.

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### தரம் I, தரம் II, செயலாளர் பதவிகள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபையினால் வரவேற்கப்படுகின்றன.

2. **வேதனம் :** தரம் I செயலாளர் பதவிக்கான வேதனக் கிரமம் வருமாறு:—

வருடாந்தம் ரூ. 6,960—6 × 180—8 × 240—ரூ. 9,960. வருடாந்தம் ரூ. 8,520 பெறுமுன் வினைத்திறமைகாண் தடை. தரம் II, செயலாளர் பதவிக்கான வேதனக் கிரமம் வருமாறு:— வருடாந்தம் ரூ. 6,024—4 × 144—8 × 180—ரூ. 8,040, வருடாந்தம் ரூ. 6,960 பெறுமுன் வினைத்திறமைகாண் தடை.

3. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரிகளான உள்ளூர் ஆட்சிச் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் மாத்திரமே கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

4. இவ்வர்த்தமானியின் IV ம் பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகின்றது.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு 24.11.70 ந் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கும்படி அனுப்பப்படவேண்டும்.

6. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபைச் செயலாளருக்கு முகவரி இடப்படவேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாக அனுப்பப்படக்கூடாது.

7. உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால், அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

டி. விஜேசிங்க,
செயலாளர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை.

த. பெ. 530, கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 28 ந் உ.

11-155—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### தரம் III வேலைகள் அத்தியட்சர்கள் பதவிகள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச்சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன.

2. **இப்பதவிக்குரிய திரட்டிய வேதன அடிப்படை வருமாறு.**—வருடாந்தம் ரூ. 4,296–10 × 144–5,736. ரூ. 4,872 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

3. **தகுதி.**—(அ) விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாய் இருத்தல் வேண்டும் :—

(ஆ) விண்ணப்பதாரர்கள் இலங்கையராய் இருத்தல் வேண்டும் ;

(இ) 24.11.70 ல் விண்ணப்பதாரர்கள் 40 வயதுக்கு அதிகமில்லாதிருத்தல்வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர்கள் பின்வருவனவற்றுள் ஒன்றை உடைமையாய் கொண்டிருத்தல் வேண்டும் :

(1) கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கான (சிவில்) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் இறுதிச் சான்றிதழ், அல்லது

(2) மாநகரப் பொறியியலில் (3 வருட மாலைப்பயிற்சி வகுப்பு) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் இறுதிச் சான்றிதழ், அல்லது

(3) கட்டட நிருமாணத்தில் (3 வருட மாலைப்பயிற்சி வகுப்பு) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் இறுதிச் சான்றிதழ், அல்லது

(4) (ஸ்ரக்ஷர்ல் இஞ்சினிறிங்) அமைப்பு பொறியியலில் (3 வருட மாலைப்பயிற்சி வகுப்பு) இலங்கை தொழில் நுட்பக்கல்லூரியின் இறுதிச்சான்றிதழ் ;

(5) உப-பரிசோதகர்கள் தரத்துக்குத் பொதுமராமத்துப் திணைக்கள மேற்பார்வை செய்யும் ஓவர்சீயர்களுக்கான திணைக்களத்துப் பதவியுயர்வுப் பரீட்சை, அல்லது

(6) சமமான அல்லது உயர்வான பரீட்சை.

மேற்படி வேதன அடிப்படையில் அமர்த்தப்படுவதற்கு, சிவில் பொறியியல் 3 வருடசெய்முறை அனுபவம் விண்ணப்பதாரர்களுக்கு இருத்தல் வேண்டும்.

4. 3 வருடங்களுக்குக் குறைந்த செய்முறை அனுபவம் உள்ள விண்ணப்பதாரரின் வேதனம் வருமாறு :—

| | | ரூபா |
|---|---|---|
| 2 வருட செய்முறை அனுபவம்—வருடாந்தம் | .. | 4,152 |
| 1 வருட செய்முறை அனுபவம்—வருடாந்தம் | .. | 3,864 |
| செய்முறை அனுபவம் இல்லாவிடின்—வருடாந்தம் | .. | 3,720 |

5. குறிப்பிட்ட வருடங்களுக்கு உள்ளூராட்சி மன்றத்தில் சேவை செய்வதாக முறியில் அல்லது ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட, உள்ளூராட்சி மன்றத்தின் ஊழியத்திலுள்ள உத்தியோகத்தர்கள், தரம் III, மராமத்து அத்தியட்சர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில், முறி அல்லது ஒப்பந்தத்தில் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் நிலையிலிருந்தால் மாத்திரமே விண்ணப்பிக்க வேண்டும்.

6. வயது எவ்வாறிருப்பினும், உரிய தொழில் நுட்பத்தகைமைகள் இருக்கும், உள்ளூராட்சிச் சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பம் கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். இத்தகைய பரீட்சார்த்திகளிடமிருந்து வரும் விண்ணப்பங்கள், தாம் கடமை பார்க்கும் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர், தலைவர் ஊடாக சமர்ப்பிக்கப்படவேண்டும்.

7. தபாலில் விண்ணப்பம் தாமதமாகிவிட்டது, காணமற்போய்விட்டது என்ற குற்றச்சாட்டு கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. கடைசி தினங்கள் வரை தமது விண்ணப்பங்களைத் தாமதிக்கும் பரீட்சார்த்திகள் தமது சொந்தச் செயலின் பேரிலேயே தாமதிப்பவராவர்.

8. இவ்வர்த்தமானியின் IV வது பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகின்றது.

9. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு, 24.11.70 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும்.

10. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரி இடப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாக அனுப்பப்படக்கூடாது.

11. உள்ளூராட்சிச் சேவையில் வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ் உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

டி. விஜேசிங்க,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530,
கொழும்பு 1, 1970 ந் ௵ ஒக்டோபர் ௴ 28 ந் வ.

11–154—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொதுச் சௌக்கியம் பயிலுவோர்க்கான உள்ளூராட்சி சேவை பயிற்சி வகுப்பு

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் பிரதி செய்யப்பட்ட படிவங்களில், பொதுச் சௌக்கியம் பயிலுவோர்க்கான பயிற்சி வகுப்பில் பிரவேசிப்பதற்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

2. **வேண்டியதகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் கீழ்க்கண்டவற்றை உடையவர் என்பதற்கான திருப்திகரமான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) 20.11.70 ல் 35 வயதிற்கு மேற்படவில்லையென்பதற்கு,

(ஆ) கல்விப்பகுதியின், சி. பா. த. ப. பரீட்சை அல்லது இருதடவைகளுக்கு மேற்படாமல், சிங்களம்/தமிழ், எண் கணிதம்/தூயகணிதம் என்பவற்றுடன் சேர்த்து 6 பாடங்களில் க. பொ. த. ப. (சாதாரணதரம்) அல்லது வேறு உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் என்பதற்கு.

மேற்கூறிய தகைமைகளையுடைய, உள்ளூராட்சிச் சேவையிலுள்ள, சுகாதார/சௌக்கிய ஓவசியர்களுக்கும், சந்தை மேற்பார்வையாளர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

(அ) பயிற்சி வகுப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள், அரச சௌக்கிய சங்கத்தின் பரீட்சைச் சபைக்கு ரூ. 150 கட்டணமாகச் செலுத்த வேண்டும். அத்துடன் கீழ்க்கண்டவற்றைத் தாங்கள் வைத்திருத்தல் வேண்டும் :—

(1) துவிச்சக்கர வண்டி.

(2) வரைதற்கருவிகள்.

(3) அளக்கும் நாடாவும் அடிமட்டமும்

(4) பரீட்சார்த்திகளைப் பயிற்சி வகுப்பிற்கு அழைக்கும்பொழுது அறிவிக்கப்படும் வேறும் வேண்டிய சாதனங்கள்.

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி, தாம் உள்ளூராட்சிச் சேவையில் 5 வருட காலம் சேவை செய்யவேனென ரூ. 2,500 பெறுமதியான ஒரு முறியில் கையெழுத்திட வேண்டும்.

(இ) பயிற்சிக்காலம் சுமார் 12 மாதங்களுக்கு நீடிக்கும்.

4. பரீட்சார்த்திகள் சேவைசெய்யும் சபைகள், அப்பரீட்சார்த்திகளின் பயிற்சிக்காலத்திற்கு, அவர்களுக்கு முழுச்சம்பளத்துடன் கடமை விடுதலையளிக்கத்தயாரானல் மாத்திரமே, அவர்களுடைய விண்ணப்பங்கள் பரிசீலனைசெய்யப்படும். இதற்குச் சான்ருக மாநகரசபை ஆணையாளர்/சபையின் தலைவரால், ஒரு சான்றிதழ் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

5. பயிற்சிநெறியை வெற்றிகரமாக முடிக்குமிடத்து, உள்ளூராட்சிச் சேவையில் வெற்றிடங்கள் வரும்பொழுது, தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்குப் பொது சௌக்கிய பரிசோதகர் பதவிகள் வழங்கப்படும். அவர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் சேவைசெய்யத் தயாராக இருத்தல் வேண்டும்.

6. எல்லா விண்ணப்பங்களும் செயலாளர், உள்ளூராட்சிச்சேவை அதிகாரசபை, த. பெ. 530, கொழும்பு என்ற விலாசத்திற்கு முகவரியிடப்பட்டுப் பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள வெறெருவு உத்தியோகத்தருக்கும் நேர்முகமாக அனுப்பப்படக்கூடாது.

7. 20.11.70 திகதிக்குப் பிந்தாமல் விண்ணப்பங்கள் எனக்குக் கிடைக்கவேண்டும்.

8. தகுதியான பரீட்சாத்திகளுக்கு மாத்திரம் விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

டி. விஜேசிங்க,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

கொழும்பு,
த. பெ. 530,
1970 ம் ௵ ஒக்டோபர் ௴ 31 ந் வ.

பொது சௌக்கியம் பயிலுவோர்க்கான பயிற்சிவகுப்புப் பிரவேச விண்ணப்பம்

1. முழுப் பெயர் : ————.

2. முகவரி : ————.

3. (அ) பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படவேண்டும்)

(ஆ) வயது : . . . . . . . . . . . . வருடங்கள் . . . . . . . . மாதங்கள் . . . .

4. கல்வித்தகைமைகள் : ————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

5. உள்ளூராட்சிச் சேவையில் தற்பொழுது வகிக்கும் பதவி : ————.

6. பரீட்சார்த்தி தற்பொழுது சேவை செய்யும் சபையின் பெயர் :——

7. உள்ளூராட்சிச் சேவைக்கு முதலில் நியமனஞ் செய்யப்பட்ட திகதி : ————.

8. வேறு ஏதாவது விவரங்கள் : ————.

இவ்விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

————————,
திகதி : ————. பரீட்சார்த்தியின் கையொப்பம்.

1. சிபார்சு செய்யப்பட்டு அனுப்பப்படுகிறது.

2. இவ்விண்ணப்பதாரர் பொது சௌக்கியம் பயிலுவோர்க்கான பயிற்சி வகுப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து, பயிற்சி நெறி முடியும் வரை அவருக்கு முழுச்சம்பளத்துடன் கடமை விடுதலை அளிக்க, இச் சபை தயாராகவுள்ளது.

————————,
மாநகர சபை ஆணையாளர்/தலைவர்,
. . . . . . . . . . . . மாநகர/நகர/பட்டண/கிராமசபை.

திகதி : ————.

11–226—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

# துணை விதிகள்

## கொச்சிக்கடைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ), 152 ஆகிய பிரிவுகளின் கீழ் கொச்சிக்கடைப் பட்டின சபையினால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினால் தமக் குரித்தாக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

பி. எச். டி. சொய்சா,
பதில் மேலதிக நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 20 ந் வ.

### துணைவிதி

இதனோடுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள மனைத்தலங்கள் பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) ஆம் பிரிவின் கீழ் அறவிடப்படும் விசேட மலகூடவரியிலிருந்து 1970 ஆம் ஆண்டுக்கு விலக்களிக்கப்படல் வேண்டும்.

### அட்டவணை

பின்வரும் மதிப்பீட்டெண்களையுடைய மனைத்தலங்கள் :—

வட்டார இல. 1

பாடசாலை ஒழுங்கை 12/3, 12/4, 12/5.

வட்டார இல. 3

பாத்திமா வீதி : 11/12, 29.

வட்டார இல. 4

துலான வீதி : 24, 24/1, 24/2, 24/3, 24/4, 24/5, 24/6, 24/7, 24/,8 24/9, 24/10, 24/11, 24/12, 26, 26/1, 26/2, 26/3,26,/4, 26/5, 26/6, 26/7, 26/8, 26/9, 26/10, 26/11, 26/12.

துலான வீதிக்கருகிலுள்ள ஒழுங்கை : 32, 43.

கொச்சிக்கடை–நீர்கொழும்பு வீதி : 108/6, 116.

சென்மேரிஸ் வீதி : 40/2, 40/4, 40/5, 40/7, 40/8, 40/9, 40/10 40/11, 40/12, 40/13, 40/14, 40/15, 54/1, 64/4, 64/5, 64/7, 64/9, 64/10, 66/1, 66/5, 82/3, 82/4, 82/5, 82/6, 82/7, 82/8, 82/9, 82/11, 82/12, 82/13.

வட்டார இல. 5

துலான வீதி : 43, 43/1, 43/2.

கொச்சிக்கடை—நீர்கொழும்பு வீதி : 145/11, 154/12, 154/13, 154/14, 154/15, 154/16.

11–188—25.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

## அக்குரெஸ்சைப் பட்டின சபை

### பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டம்

(176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டவிதி.

பீலிக்ஸ். ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 19 ந் வ.

### விதி

(176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்திற் கமைவாக ஆக்கப்பட்டு 1919, ஏப்ரல் 4 ன் 7,004 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டனவும் 1943 ஏப்ரல் 9 ன் 9,108 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதியினால் கடைசியாகத் திருத்தப்பட்டன வுமான விதிகள் அக்குரெஸ்சைப் பட்டின சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ளபிரதேசம் சம்பந்தப்பட்டவரையில் அவற்றின் அ. 3 ம் இலக்க விதிக்கு பதிலாக பின்வரும் புதிய விதியை வைப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

“ அ. 3 (1) கட்டணம் செலுத்துவதன்பேரில் ஆட்களை அனுமதிக்கும் பகிரங்க அரங்காட்டுகளுக்குக் கட்டடம் அல்லது எழுப்பம் எதனையும் உபயோகிப்பதற்கு உத்தரவுப்பத்திரம் கோரும் விண்ணப்பகாரர் அத்தகைய உத்தரவுப்பத்திரம் அவருக்கு வழங்கப்படுதற்கு முன்னர் பின்வரும் விதிதப்படி கணக்கிடப்படும் ஒரு கட்டணத்தைச் சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

| | ஒரு நாளைக்கு | ஒரு மாதத் துக்கு | (திசம்பர் 31 உடன் முடிவடையும்) ஒரு வருடத் துக்கு |
|---|---|---|---|
| | ரூ. ச | ரூ. ச | ரூ. ச. |
| 199 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப் பட்டிருக்குமிடத்து .. | 5 00 .. | 20 00 .. | 100 00 |
| 199 பேருக்கு மேற்பட்டோருக்கு ஆனால் 399 பேருக்கு மேற் படாத ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. .. | 10 00 .. | 40 00 .. | 200 00 |
| 399 பேருக்கு மேற்பட்டோருக்கு ஆசனவசதி செய்யப்பட்டிருக்கு மிடத்து .. .. | 15 00 .. | 60 00 .. | 350 00 |

11–187—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257ம் அதிகாரமாம்) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் பொலனறுவை மாவட்டத்திலுள்ள பிந்தென்னை தெற்கு கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ம் உட்பிரிவினால் அன்னாருக்களிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

பி. எச். டி. சொய்சா,
பதில் மேலதிக நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1970 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 20 ந உ.

### துணைவிதிகள்

### கிராமச் சந்தைகள்

1. கிராமச் சந்தை ஒவ்வொன்றிலுமிருந்து ஒரு மைல் ஆரத்தைக் கொண்ட ஒரு வட்டத்துள் இருக்கும் பிரதேசம் அச்சந்தையின் சந்தைப் பிரதேசமாகுமென இத்தால் பிரசித்தஞ் செய்யப்படுகிறது.

2. சபையினால் தாபிக்கப்பட்ட கிராமச் சந்தை எதிலுமுள்ள கடை, பீடம் அல்லது இடம் எதனையும் உபயோகிக்கும் அல்லது வசப்படுத்தும் ஒவ்வொருவரும், அத்தகைய உபயோகம் அல்லது வசப்படுத்தலுக்காக இதனோடுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படியான ஒரு கட்டணம் செலுத்த வேண்டும்.

### திரிந்து விற்போர்

3. (1) தலைவரால் அதற்காக வழக்கப்பட்ட ஒரு உத்தரவுப்பத்திரத்தின் பேரிலன்றி எவரும் திரிந்து விற்பனை செய்யும் வியாபாரம் ஒன்றைத் தொடங்கவோ அல்லது நடத்தவோ கூடாது.

(2) (1) ம் பந்தியின்படி வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரம் ஒவ்வொன்றும் முன்னரே தலைவரால் அழிக்கப்பட்டாலன்றி அது வழங்கப்பட்ட வருடத்தின் திசம்பர் மாதம் முப்பத்தோராந் திகதியுடன் காலாவதியாகும்.

(3) இத்துணைவிதிகளில்—
"தலைவர்" எனில் சபையின் தலைவர் எனப் பொருள்படும்.
"சபை" எனில் பொலனறுவை மாவட்டத்திலுள்ள பிந்தென்னை தெற்குக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபை எனப் பொருள்படும்.

### அட்டவணை

| | | தினமொன்றுக்கான கட்டணம் ரூ. | ச. |
|---|---|---|---|
| 1. | சந்தைக் கட்டடத்தினுள்ளிருக்கும் 50 சதுர அடிக்கு மேற்பட்ட கடை பீடம் அல்லது இடம் ஒன்றுக்கு .. | 2 | 0 |
| 2. | சந்தை வளவுக்குள்ளிருக்கும் அத்தகைய கடையொன்றுக்கு அதன் பரப்பு— | | |
| | (அ) 50 சதுர அடிக்கு மேற்படாதிருக்குமிடத்து .. | 1 | 0 |
| | (ஆ) 30 சதுர அடிக்கு மேற்படவும் ஆனால் 50 சதுர அடிக்கு மேற்படாதுமிருக்குமிடத்து .. | 1 | 25 |
| | (இ) 50 சதுர அடிக்கு மேற்படவும் ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாது இருக்குமிடத்து.. | 1 | 50 |
| 3. | வெளித்திடலில் உள்ள ஒரு கடை அல்லது இடத்துக்கு அதன் பரப்பு— | | |
| | (அ) 9 சதுர அடிக்கு மேற்படாதிருக்குமிடத்து .. | 0 | 10 |
| | (ஆ) 9 சதுர அடிக்கு மேற்படவும் ஆனால் 25 சதுர அடிக்கு மேற்படாதுமிருக்குமிடத்து .. | 0 | 25 |
| | (இ) 25 சதுர அடிக்கு மேற்படவும் ஆனால் 50 சதுர அடிக்கு மேற்கடாதிருக்குமிடத்து .. | 0 | 50 |
| | (ஈ) 50 சதுர அடிக்கு மேற்படவும் ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாதிருக்குமிடத்து .. | 1 | 0 |

11–189—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

## தம்புல்லைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) 152 ஆகிய பிரிவுகளின் கீழ் தம்புல்லைப் பட்டின சபையாலாக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

பீ. எச். டி. சொயிசா,
பதில்மேலதிக நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 24 ந உ.

### துணைவிதி

இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மனைத்தலங்கள் (256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) ம் பிரிவின் கீழ் அறவிடப்பட்டதும் 1970 சனவரி 27 ந் திகதியிடப்பட்டு 1970 பெப்புருவரி 13 ந் திகதிய 14,893 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான 1970 ஆம் ஆண்டுக்குரிய விசேட தண்ணீர் வரியிலிருந்து விலக்களிக்கப்படல் வேண்டும்.

### அட்டவணை

பின்வரும் மதிப்பீட்டிலக்கங்களைக் கொண்ட மனைத்தலங்கள் :—

1 ம் வட்டாரம் கந்தலமை வீதி : 20, 30, 32, 34, 36, 40, 50, 60, 60/1, 70, 76, 82, 86, 90, 100, 106, 114, 116, 120, 122, 130, 136, 144, 150, 156, 160, 166, 170, 174, 180, 186, 186/1, 196, 200, 206, 210, 240.

மாத்தளை வீதி : 83/26, 161, 167, 191, 209, 46, 50, 76, 112, 136/30, 194, 200, 214.

இரத்மலகஸ்ஸல் வீதி : 7, 7/1, 15, 25, 12, 24, 40.

2 ம் வட்டாரம்—கந்தலகம வீதி : 15, 31, 71, 77, 83, 93, 97, 101, 115, 119, 125, 131, 135, 139, 143, 149, 153, 157, 161, 165, 165/15, 165/25, 165/30, 169, 175, 179, 189, 193, 215, 239.

பாதெனிய வீதி : 7, 15, 25, 25/1, 25எ, 27, 37, 45, 47, 49, 53, 53/1, 55, 57, 57/2, 57/4, 57/10, 57/25, 63, 14, 20, 26, 30, 30/1 36, 36/1, 40, 40/1, 42, 44, 44/1, 44/4, 46, 46/1, 46/6, 46/7 48, 52, 54.

பகலவெவ வீதி 1, 2, 14.

3 ம் வட்டாரம் கலப்புலானவெவ வீதி : 1, 1/1, 1/8, 3, 3எ, 5, 5/1, 5/2, 9, 9எ, 11, 13, 15,

குருநாகல் வீதி : 227/16, 227/18, 227/25, 227/32, 245, 259, 275, 30, 478/3, 506எ, 508எ, 510, 512, 512/1.

நிசங்கா மாவத்தை : 3, 3/5, 5, 17/20, 17/25, 17/30, 17/35.

3 ம் வட்டாரம் பிரிவினை வீதி : 15/3, 15/9, 15/10, 15/11, 15/24, 25, 59, 63, 77, 101, 16, 26, 28, 42, 44, 52, 54, 56, 58, 60, 66, 78, 100, 100/7.

4 ம் வட்டாரம் அனுராதபுர வீதி : 172/7.

குருநாகல் வீதி : 103, 103/7, 103/12, 107, 121, 121/1, 121/8, 121/18, 129, 129/1, 129/2, 129/3, 129/4, 129/5, 129/6, 129/7 129/8, 129/9, 129/10, 129/10எ, 129/11, 129/12, 129/13, 129/14, 129/15, 129/15எ, 129/16, 129/17, 129/18, 129/19, 129/20, 129/21, 129/22, 129/23, 129/24, 129/25, 129/25எ, 135, 155, 169, 189, 205, 298, 302, 314, 318, 328, 340, 340எ, 342, 348, 358, 362, 366, 376, 400.

5 ம் வட்டாரம் அனுராதபுர வீதி : 367, 471, 625, 631, 637, 643, 651, 659, 705, 709, 805, 811, 813, 819, 823, 825, 829, 833, 839, 843, 851, 857, 857/1, 859, 861, 861/1, 869, 875, 674, 680, 700, 718, 720, 730, 736, 738, 742, 748, 760, 766, 774, 784, 786, 792, 800, 806, 812, 820, 820/1, 830, 830/1.

திருகோணமலை வீதி : 17, 21, 23, 29, 2, 8, 20, 24, 30.

11–175—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

# உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

**கண்டி மாவட்டம்**

**பாதஹேவாஹெற்ற கந்தஹாய தெற்கு 2 ஆம் இல. கிராமச் சபை**

அபேசேகர முதியன்செலெ ஜினனந்த என்பவர் பாதஹேவாஹெற்ற கந்தஹாய தெற்கு 2 ஆம் இல. கிராமச் சபையின் 17 ஆம் இலக்க வட்டாரப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளாரென (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ். அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்)

கொழும்பு,
1970 ம் ஆடு ஒக்ரோபர் மீ 26 ந வ.

11–224—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

## உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள், அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிப்பிட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 (2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1970 ம் ஆடு ஒற்ரோபர் மீ 25 ந வ.

அட்டவணை

| வட்டார இல. | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| | கண்டி மாவட்டம் |
| | **அரிஸ்பத்து உடகம்பகா கிராமச் சபை** |
| 4 .. | கபுகொட்டுவெ கெதர அகமது மொகமது மொகமது முகுசின் |
| | மாத்தளை மாவட்டம் |
| | **மாத்தளை மாநகர சபை** |
| 3 .. | உடுகம, அலெக்சாண்டர் றிச்சட் |
| | கொழும்பு மாவட்டம் |
| | **தெஹிவலை கல்கிசை மாநகர சபை** |
| 13 .. | சமரவீர டொன் வில்லி |
| | குருணாகல் மாவட்டம் |
| | **கொக்கரெல்ல கிராமச்சபை** |
| 5 .. | ஜயவர்த்தன முதியன்செலாகே முத்துபண்டா |

11–225—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

# நானாவித அறிவித்தல்கள்

## 1952 ஆண்டின் 6 ம் இலக்கத் தல தாபனங்கள் (நிலையான உபவிதிகள்) பற்றிய சட்டம்

1952 ம் ஆண்டின் 6ம் தலதாபனங்கள் (நிலையான உபவிதிகள்) பற்றிய சட்டத்தின் (அத்தியாயம் 261 ன்) 3 ம் பிரிவின்படி வவுனியா மாவட்டத்திலுள்ள கிழக்கு மூலை வடக்கு கிராமப் பகுதியின் கிராமச் சங்கத்தால் நிறைவேற்றப்பட்ட கீழ்காணும் தீர்மானம் அப்பிரிவின் தாற்பரிப்படி இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.

**தீர்மானம்**

தல தாபன மந்திரியால் ஆக்கப்பட்டு 1953 ம் ஆண்டு சித்திரை மாதம் 10 ம் திகதிய 10,517 ம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, செனேற்றுச் சபையாலும் சனப்பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு, 1953 ம் ஆண்டு ஆவணி மாதம் 7 ம் திகதி வெளியான 10,560 ம் இலக்க துணைவிதிகள் வர்த்தமான அறிவித்தலின் 3 ம் பாகத்தை இத் தீர்மானம் வர்த்தமானியில் வெளியாகும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென கிழக்கு மூலை வடக்கு கிராமச் சபை 1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க தல தாபனங்கள் (நிலையான உபவிதிகளின்) பற்றிய சட்டத்தின் 3ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்படி இத்தால் தீர்மானிக்கின்றது.

க. நல்லதம்பி ஜே. பி.
தலைவர்,
கிழக்கு மூலை வடக்கு கிராம சபை.

கிராம சபை அலுவலகம்,
ஓமந்தை, 1970 ந் ஆடு செப்டம்பர் மீ 16 வ.

11–176—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**1970 ம் ஆண்டின் உப வரவு செலவுத் திட்டம் இல. 2**

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) 214(2) (பி)பிரிவின் பிரகாரம், யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் 1970 ம் ஆண்டிற்கான இரண்டாவது உப வரவு செலவுத் திட்டம், யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற அலுவலகத்தில், 1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 5 ம் திகதி தொடக்கம் ஏழு நாட்கள் வரை பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்குமென இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

தா. ச. துரைராஜா,
முதல்வர்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1970 ம் ஆடு ஒற்ரோபர் மீ 23 ந வ.

11–197—5.11.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,931

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

### 1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)

### வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி.ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்றல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க எதுவாகும்.

7. கையொப்பங்களின்கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரததுக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரறுல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்து சேரவேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 0 | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | | விலை ரூ. ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|---|
| (அ) | (i) | வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | 20 |
| | (ii) | வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | 20 |
| (ஆ) | (i) | வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | 15 |
| | (ii) | வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க **பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் .. | 2.10.70 | வெள்ளி .. | 25. 9.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 9.10.70 | வெள்ளி .. | 2.10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 16.10.70 | வெள்ளி .. | 9.10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 23.10.70 | வெள்ளி .. | 16.10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 30.10.70 | வெள்ளி .. | 23.10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| நவெம்பர் .. | 5.11.70 | வியாழன் .. | 30.10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 12.11.70 | வியாழன் .. | 5.11.70 | வியாழன் .. | ந.ப. 12.00 |
| | 20.11.70 | வெள்ளி .. | 12.11.70 | வியாழன் .. | ந.ப. 12.00 |
| | 27.11.70 | வெள்ளி .. | 20.11.70 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| திசெம்பர் ... | 4.12.70 | வெள்ளி .. | 27.11.70 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 11.12.70 | வெள்ளி .. | 4.12.70 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 18.12.70 | வெள்ளி .. | 10.12.70 | வியாழன் .. | பி.ப. 3.30 |
| | 24.12.70 | வியாழன் .. | 17.12.70 | வியாழன் .. | பி.ப. 3.30 |
| | 31.12.70 | வியாழன் .. | 24.12.70 | வியாழன் .. | பி.ப. 3.30 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
**1970 ஆம் ஆண்டு யூன் மீ 2 ஆந் உ.**

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.